**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 363/2019**

**வா.சா.1 – வெங்கடாசலம்**

**<u>23-02-2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பனியன் கம்பெனியில் டெய்லராக பணிபுரிகிறேன். எனது தந்தையார் மற்றும் 1,2 பிரதிவாதிகள் சின்னபாப்பநாயக்கர், பெரிய பாப்பநாயக்கர், ரங்கநாயக்கர், சின்னச்சாமி வழி வந்தவர்கள் என்றால் எனது பாட்டன் சின்னபாப்பநாயக்கர், எனது தாத்தா ரங்கநாயக்கர், இரண்டாவது தாத்தா பெரிய பாப்பநாயக்கர் (எ) பாப்பநாயக்கர், எனது மூன்றாவது தாத்தா சின்னச்சாமி. இவர்களுடைய மூதாதையர்கள் கோமாளி பாப்பநாயக்கர் என்றால் சின்னபாப்பா நாயக்கரின் அப்பா கோமாளி பாப்பநாயக்கர்.

**2.** 2ம் பிரதிவாதியின் அப்பா ரங்கசாமியை வழக்கு தாக்கல் செய்தபோது சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை. அவர் இரண்டு ஆவணங்கள் எழுதிகொடுத்ததால் சேர்க்கவில்லை. தாவா தாக்கல் செய்த போது 2ம் பிரதிவாதியின் அப்பா ரங்கசாமி உயிருடன் தான் இருந்தார். எனது தாயார் எழுதி வைத்த உயிலை சட்டப்படி புரபேட் செய்ய வேண்டுமென்றால் தெரியாது. எனது பிராதில் ரங்கசாமி 1,2 பிரதிவாதிகள் மீது 2013ல் எழுதி வைத்த இரண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று இவ்வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் பத்திரத்தை எடுத்து பார்த்தபோது தான் மேற்கண்ட ஆவணம் பற்றி தெரியும். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை நான் வழக்கில் தாக்கல் செய்துளளேன் என்றால் வில்லங்கம் பார்த்த போது மேற்படி பத்திரங்கள் விபரம் ெரியவந்தால் தாக்கல் செய்யவில்லை. தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்று பரிகாரங்கள் கேட்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பரிகாரங்கள் கேட்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**3.** தாவா சொத்துக்கள் மற்றும் பிற கூட்டு குடும்ப சொத்துக்களின் பழைய காலை எண்கள் 458, 462/1, 460/4, 460/15 என்றால் சரியல்ல. சரியான காலை எண் என்ன என்றால் நான் 458 காலைக்குரிய சொத்திற்கு தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அதன் தற்போதைய உட்பிரிவு எண்.458/4 பட்டா எண்.310. மேற்கண்ட உட்பிரிவு எண்.458/4 மற்றும் பட்டா எண்.310 ஐ பற்றி வழக்குரையிலோ , பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழையோ அரசு வழிகாட்டுதலையோ தாவா சொத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தெரியவில்லை. நான் வழக்கறிஞரிடம் வில்லங்க சான்று கொடுத்துள்ளேன்,

அரசு வழிகாட்டுதல் மதிப்பை தாக்கல் செய்யவில்லை. இரண்டு ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் வில்லங்க சான்று கொடுத்துள்ளேன்.

**4.** 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. என்ன விபரம் அதில் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் பிரதிவாதிகள் கூட்டாக உள்ளதாக வழக்கறிஞர் சொல்லியுள்ளார். வழக்கறிஞரிடம் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை கேட்டு தெரிந்து கொண்டேனா இல்லையா என்றால் முழுமையாக கேட்டு தெரிந்து கொண்டேன். எதிர்வழக்குரையில் என்ன போடப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாமல் தான் வழக்காடுகிறேன் என்றால் அதனை வழக்கறிஞர் பார்த்துகொள்வார். எதிர்வழக்குரை 14ம் பத்தியில் கூட்டு குடும்ப சொத்துக்கள் மற்றும் கூட்டு பங்குதாரர்கள் அனைவரையும் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் தாவா சொத்து எனக்கும், பிரதிவாதிக்கும் உள்ள தனிப்பட்ட சொத்தாகும்.

**5.** 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை மறுத்து பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞருக்கு தான் தெரியும். அவ்வாறு மறுத்து பதிலுரை தாக்கல் செய்யாவிட்டால் எதிர்வழக்குரை சங்கதிகளை ஒப்புக்கொள்வதாக அர்த்தம் என்றால் சரியல்ல. வழக்குரை, திருத்தப்பட்ட வழக்குரை, பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றை 1,2 பிரதிவாதிகளை எதிர்வழக்குரை சங்கதிகளை மறுப்பதாக எவ்வித வாசகமும் இல்லை என்றால் தெரியாது. எனது தாத்தா ரங்கநாயக்கர் எனது அப்பா பெயரில் எழுதி வைத்த ஆவணத்திற்கும், 2ம் பிரதிவாதியின் தகப்பனார் ரங்கசாமியின் பெயரில் எழுதி வைத்த ஆவணத்திற்கும் மூலஆவணமான 1912 மற்றும் 1934ம் ஆண்டு சின்னபாப்பநாயக்கர் பெயரில் உள்ள கிரைய ஆவணங்களையும் மற்றும் 1966ம் ஆணடு ரங்கநாயக்கர் பெயரில் உள்ளகிரைய ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் 1934ம் ஆண்டு பத்திரம் மட்டும் தான் தாவா சொத்தின் பத்திரம்.

**6.** 1912 மற்றும் 1966 உட்பிரிவு எண்.6 க்கு பாத்தியப்பட்டது. ( வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி 1912, 1934, 1966 ஆவணங்கள் பற்றி எதிர்வழக்குரையில் தெரிவிக்காமல் அது குறித்து கேள்வி கேட்பதால் ஆட்சேபனை செய்தார். அவரது ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டு கேள்விக்கான பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. )

மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.23 16:11:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.